# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
***********

முறையீட்டு மனு எண்: 018/2018/பே
ஆணை நாள். 03–09–2018

திரு. சி. சின்னச்சாமி, B.Sc,
த/பெ திரு. சின்னக்காளை,
6–2–37 M, லட்சுமி நகர்,
பெரியார் காலனி,
நிலக்கோட்டை அஞ்சல்,
திண்டுக்கல் மாவட்டம்.–628 208.

-- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

ஆணை.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சியைச் சார்ந்த திரு. சி. சின்னச்சாமி, என்பவரின் 30.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.18/2018 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவின் மீது பெறப்பட்டுள்ள அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில் , திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி, 6வது வார்டு, பெரியார் காலனி, லட்சுமி நகரில் வடக்கு தெற்காக கட்டப்பட்ட கழிவு நீர் கால்வாயில், தெற்கே மேடாக கட்டப்பட்டுள்ளதாகவும், இதன் பொருட்டு கழிவு நீர் வடக்கிலிருந்து தெற்கே செல்ல முடியாதபடி உள்ளதாக தெரிவித்தும், இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனுவிற்கு, நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தானே நேரில் சென்று இக்கால்வாயினை பார்த்ததாகவும், கழிவு நீர் தேங்காமல் நல்லமுறையில் செல்கிறது என்ற பொய்யான தகவலை தெரிவித்துள்ளதாகவும், இதுவரை சரி செய்யவில்லை எனவும்,தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 06.02.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில், மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 08.03.2018ம் நாளிட்ட அழைப்பாணையின்படி, முறையீட்டு மனுதாரர் மற்றும் நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை அளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 08.05.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் 08.05.2018 அன்று ஆஜரான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர், இம்முறையீட்டு மனு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதாக உறுதி அளித்தார்.

அதன்படி நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 319/2018,அ.2/நாள்.06.06.2018ம் நாளிட்ட அறிக்கையின்படி, மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீடு சம்பந்தமாக, முறையீட்டு மனுதாரரை நேரில் அணுகி விசாரணை செய்ததில் மேற்கண்ட 6வது வார்டு, லெட்சுமி நகர், 2வது தெரு கிழக்கு பகுதியில், வடக்கிலிருந்து தெற்காக கட்டப்பட்ட கழிவு நீர் கால்வாய் போதிய வாட்டம் இல்லாமல், தண்ணீர் செல்ல வழியின்றி தேங்கியிருந்தது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்த கழிவு நீர் வாய்க்காலை பேரூராட்சி மன்ற அனுமதி பெற்று அவசர அவசியம் கருதி உடனடியாக சரி செய்ய பணி நடைபெற்று வருவதாகவும் தெரிவித்து தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேலும், இம்முறையீடு குறித்து முறையீட்டு மனுதாரர் தனது 21.06.2018ம் நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட வடிகாலினை 4 மாதங்களுக்குள் அதாவது 14.09.2018க்குள் சரி செய்து தருவதாக தற்போதைய செயல் அலுவலர், திரு.கோட்டைச்சாமி மற்றும் பேரூராட்சி பொறியாளர் திரு.ஜெயகிருஷ்ணன் ஆகியோர் உறுதியளித்ததின்பேரில், தன்னால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ள முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கை தொடரவேண்டாம் என தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரரின் 21.06.2018ம் நாளிட்ட ஒப்புதல் கடிதம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் மேற்படி கழிவுநீர் வாய்க்கால் சரி செய்யும் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு, பேரூராட்சி மன்றத்தின் அனுமதியினை பெற்று பணி நடைபெற்று வருவதாகவும், முறையீட்டு மனுதாரர் தனது 21.06.2018ம் நாளிட்ட கடிதத்தில், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி பொறியாளர் ஆகியோர் மேற்படி பணியினை நான்கு மாதங்களுக்குள் சரி செய்வதாக உறுதியளித்ததின் பேரில் தன்னால் இப்பொருள் தொடர்பாக அனுப்பப்பட்ட முறையீட்டு மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என தெரிவித்துள்ளதின் பேரிலும், இம்முறையீட்டு மனு மீது மீதான தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இருப்பினும் உறுதி அளிக்கப்பட்டவாறு பணிகள் முடிக்கப்படுவதுடன், அதற்கான அறிக்கையினையும் அனுப்பிவைத்திட வேண்டுமென வலியுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்.

1.திரு. சி. சின்னச்சாமி, B.Sc,
த/பெ திரு சின்னக்காளை,
6–2–37 M, லட்சுமி நகர்,
பெரியார் காலனி,
நிலக்கோட்டை ,
திண்டுக்கல் மாவட்டம்.–628 208.

2.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல்.